# இந்து சமுதாய வரலாற்றில் வர்ணக்கோட்பாடு பற்றிய கருத்தாடல்கள் – ஒரு மதிப்பீடு

**நிவேதா, கை., முகுந்தன், ச.**

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

nivenatha6@gmail.com

*இந்து சமூகத்தவர்களால் புராதன காலம் தொடக்கம் பின்பற்றப்பட்டு வருகின்ற நான்கு அடுக்குகளைக் கொண்ட சமூகக் கட்டமைப்பு என்று வர்ணக்கோட்பாட்டைக் கூறலாம். "வர்ணம்" என்ற பதம் நிறம், வெளிவடிவம், தோற்றம், ஒளி எனப் பல பொருள்படும். ஆரியப்பண்பாட்டைக் கொண்ட மக்கள் தம்மை மற்றையோரிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ள இச்சொல்லாடலை முதலில் கையாண்டனர். அதன் பின்னர் சமூகம் முழுவதிலும் வாழ்ந்த மக்கள் தொழில், நிறம், குணம் என்ற அடிப்படைகள் வகுக்கப்பட்டு காலப்போக்கில் பிறப்பின் அடிப்படையில் என்று கருத்துருவாக்கம் வலுப்பெற்றது. பிற்பட்ட காலத்தில் வர்ணம் பிறழ்வுநிலை அடைந்து பல சாதிகளும், உபசாதிகளும் தோற்றம் பெற்றன. மக்கள் மத்தியில் தவறான புரிதலும், விமர்சனங்களும் ஏற்படத்தொடங்கின. இவ்வாய்வு இந்து சமுதாயத்தில் வர்ணக்கோட்பாடு தொடர்பான கருத்தாடல்களை மதிப்பீடு செய்து வெளிக்கொணர்தலை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது வரலாற்றியல் ஆய்வு, மற்றும் விவரண ஆய்வு முறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்டு தரவுகள் உய்த்தறிவாய்வு, தொகுத்தறிவாய்வு முறையியலினை அனுசரித்தும் ஆய்வின் தேவை கருதி ஒப்பீட்டு ஆய்வு முறை மூலமும் உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன. இந்து சமய வரலாற்றிலே நால்வகை வர்ணமும் வேதகாலத்தில் விராட புருடனுடைய வேள்வியில் இருந்து தோற்றம் பெற்றவகை, அது பின்னர், கருத்துருவாக்கம் பெற்ற முறை என்பன வடமொழி, மற்றும் தமிழ்மொழி மூலங்களை ஆதாரமாகக் கொண்டு எடுத்தியம்பப்பட்டுள்ளது. மனுதர்ம சாஸ்திர காலத்திற்குப் பின்னர் வர்ணப் பிறழ்வால் தோற்றம் பெற்ற சாதிகளால் சமூகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளை கண்டித்து பல சித்தர்கள், வடஇந்திய பக்திநெறியாளர்கள், நவீன சீர்திருத்த சிந்தனையாளர்கள், சமகால சீர்திருத்த சிந்தனையாளர்கள் என்போர் தமது செயற்பாடுகள் மூலமும், பனுவல்கள் வாயிலாகவும் பல கண்டனங்களையும், விமர்சனங்களையும் காலத்திற்குக் காலம் முன்வைத்து வருகின்றனர். இவை தொடர்பான பல விடயங்களும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. சமகாலத்தில் வர்ணம் உருமாறிப் போனதால் அதன் மூலம் தோற்றம் பெற்ற சாதி பற்றியும் சமகால நோக்குநிலையில் சாதியின் தாக்கம் மற்றும் சாதி ஒழிப்பிற்கான தீர்வுகள் என்பனவும் முன்வைக்கப்பட்டுள்ளன. வர்ணத்திற்கும், சாதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பற்றியும், பிறப்பின் அடிப்படையில் சாதி அமைவதல்ல என்ற விளக்கம், சமகாலத்தில் வர்ணக்கோட்பாட்டின் பிரதிபலிப்புக்கள் என பலவிடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவை வர்ணக் கோட்பாட்டு பற்றிய ஒரு பரிமாணத்தை அறிந்து கொள்ளப் பயன்படுவதோடு சமகாலத்தில் இக்கோட்பாடு தொடர்பாக இந்து சமய நூல்களின் மீதும், இந்துசமுதாய பெரியார்கள்*

மீதும் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் குறித்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளவும் துணைபுரிகின்றது. இக்கால சூழ்நிலையில் இந்து சமுதாய புலத்தில் வர்ணம் தொடர்பாக காணப்படுகின்ற தவறான புரிதல்களுக்கும், விமர்சனங்களுக்கும் விடை பகர்வதுடன் ஏற்றத் தாழ்வுகளை அரிதாக்கி இந்து சமூகத்தில் வர்ணக்கோட்பாட்டை சிறப்புறச் செய்யவும் இந்த ஆய்வு காத்திரமாக அமையும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** இந்து, சமுதாயம், வர்ணம், கோட்பாடு, பிறழ்வு, விமர்சனங்கள்